

## 19ஆவது UNSIAP மாநாட்டின் தலைமைப் பொறுப்பு

# மலேசியா மீண்டும் தேர்வு

புத்ராஜெயா, டிச. 14-

தேசிய புள்ளிவிவர இலாகாவைப் பிரதிநிதித்து மலேசியா மீண்டும் ஆசியா - பசிபிக்கிற்கான புள்ளி விவர அமைப்பின் ஆட்சி மன்றத் தலைமைப் பொறுப்பேற்கின்றது. ஏற்கெனவே 2022ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற இந்த ஆட்சிமன்ற மாநாட்டிற்கு மலேசியா தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தது.

அதன்பின்னர் கடந்தாண்டு மே 24ஆம் தேதி ஆசியா பசிபிக் நாடுகளுக்கு இடையிலான வாக் கெடுப்பில் மலேசியா 2022 - 2024ஆம் தவணையில் இந்த ஆட்சி மன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இவ்வாண்டு 19ஆவது முறையாக நடத்தப்படும் இந்த மாநாட்டைக் கோலாலம்பூரில் ஏற்றுநடத்தும் வாய்ப்பையும் மலேசியா பெற்றுள்ளது. 2021-2025ஆம் ஆண்டுகளில் நிர்வாகம், நிதி நிலவரம் க்மீகுஜ அக திட்ட முன்னெடுப்புகள் உள்ளிட்ட அம்சங்களை மதிப்பிடுவதில் இந்த ஆண்டு மாநாடு முக்கியப் பங்காற்றுகிறது.

19ஆவது மாநாட்டை ஏற்று நடத்தும் வாய்ப்பு மலேசியாவுக்கு கிடைத்தது மிகவும் அதிர்ஷ்டம் என மலேசியப் புள்ளிவிவரத்துறைத் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் முகமட் உஸிர் மஹிடின் தெரிவித்தார்.

இந்த ஆட்சி மன்றக் கூட்டம் மட்டுமன்றி 18ஆவது முறையாக நடத்தப்படும் ஆசியா பசிபிக் தேசியப் புள்ளிவிவரத் தலைமையகத்திற்கான நிர்வாகக் கருத்தரங்கையும் நடத்தும் வாய்ப்பு மலேசியாவுக்குக் கிடைத்துள்ளது.

இந்த இரு நிகழ்ச்சிகளையும் ஆசியா - பசிபிக்கிற்கான புள்ளிவிவர மையம் ஏற்பாடு செய்துள்ளது எனவும் அவர் கூறினார். இந்த நிகழ்ச்சியில் ஆசியா, பசிபிக் அமைப்பு நாடுகளில் இருந்து 97 தரப்பினர் பங்கேற்க உள்ளனர். இதில் ஜப்பான், வங்காளதேசம், சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், கொரியா, தாய்லாந்து, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகளும் பேராளர்களும் பங்கேற்கின்றனர்.

MINISTRY OF ECONOMY
DEPARTMENT OF STATISTICS MALAYSIA

மலேசியப் பிரதிநிதிகளுடன் பொருளாதாரத்துறை அமைச்சின் தலைமைச் செயலாளர் டத்தோ நோர் அஸ்மி டிரோனும் பங்கேற்கவுள்ளார்.

இந்த 19ஆவது மாநாட்டில் 18ஆவது மாநாட்டில் எழுப்பப்பட்ட விவகாரங்கள் குறித்து




கலந்துரையாடப்படும்.

2023 ஆண்டு அடைவு நிலை குறித்த இயக்குநர் ஆய்வறிக்கை, 2024ஆம் ஆண்டிற்கான பணி நடவடிக்கை பரிந்துரை - கட்டமைப்பு நிதித் திட்டம், 2025 - 2029ஆம் ஆண்டுக்கான வியூகத் திட்ட வ்ரையறுப்பு உள்ளிட்ட அம்சங்களும் இதில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.